

தாயுமானவரின்
பரநடையும் உலக நடையும்
மன்னார்குடி பானுகுமார்.
ராஜம் பதிப்பகம்
இணையதளத்தில் banukumar.in

----------------------------------------------------------------------------------------------------------------

# தாயுமானவரின் பரநடையும் உலக நடையும்

உலக நடையை விரும்புவர் உடலை "நான்" எனக் கருதுகின்றனர். இதனால் உடல் பற்று அதிகம் கொண்டுள்னனர்.

மனம் உடலில் தேவையைப் பூர்த்தி செய்தவதில் ஈடுபடுகின்றது. இதற்குத் துணையாக சப்தம், ஸ்பரிசம், ரூபம், ரசம், கந்தம் என்னும் ஐம்புலன்கள் இருக்கின்றன.

சங்கீதத்தில் அதிகம பிரியம் கொண்டவர்ககளுக்கு சப்த புலன் அதிக வளர்ச்சி அடைந்திருக்கும். சங்கீதத்தையே வாழ்க்கையின் இலட்சியமாகக் கொண்டு அவர்கள் வாழ்வர்.

ஸ்பரிச உணர்ச்சியில் இன்பம் கொள்பவர்களுக்கு ஸ்பரிச புலன் மிகுந்த வளர்ச்சி அடைந்திருக்கும்.

அவர்கள் சிற்றின்பத்தையே இலட்சியமாகக் கொண்டு வாழ்வர். பல அழகிய காட்சிளைக் காண அவா உடையவர்களுக்கு ரூப புலன் சிறந்த வளர்ச்சி அடைந்திருக்கும்.

இயற்கை அழகை அனுபவிப்பதற்கே மானிடப் பிறவி அமைந்துள்ளது என்று அன்னார் கருதுவர்.

அறுசுவையுடன் கூடிய உணவை ருசிப்பதில் சிலர் பிரியம் கொண்டு இருப்பர். ரசமாகிய புலன் அவர்களுக்கு மிகுந்து இருக்கும்.

உண்பதற்காகவே உடல் உள்ளது என்பதுவே அவர்கள் கொள்கையாக இருக்கும். உண்பதும் உறங்குவதுமே அவர்கள் தொழில்.

---

இன்னும சிலர் மணம் கமழும் வாசனைத் திரவியங்களில் மோகம் கொண்டு இருப்பர்.

கந்தம் என்னும் புலன் அவர்களுக்கு அதிக வளர்ச்சி அடைந்திருக்கும். எப்புலனின் உணர்ச்சிகள் அதிக வளர்ச்சி அடைந்திருக்கின்றனவோ அவற்றின் தன்மைக்கு ஏற்ப மனிதனின் பழக்க வழக்கங்கள் அமைந்திருக்கும்.

ஒரறிவு முதல் ஐயறிவு வரை உடைய இதர ஜீவன்களிடத்திலும் இப்புலன் உணர்ச்சிகள் மிகுந்திருக்கின்றன.

மான் குழலோசையைக் கேட்டால் அசையாது நின்றுவிடும். சப்த புலனுக்கு அது அடிமை.

இதனால் அது வேடனது அம்பிற்கு இலக்கு ஆகின்றது. புலி முதலிய மிருகங்களும் அச்சமங்களில் அதனை எளிதில் கொன்றுவிடும்.

யானை ஸ்பரிச புலனுக்கு அடிமை. பெண் யானையைக் கொண்டே ஆண்யானை பிடிக்கப்படுகிறது.

விட்டில் பூச்சிகள் விளக்கில் விழுந்து மடிகின்றன. ரூப புலனுக்கு இவை அடிமை. வெளிச்சத்தை நாடும் பொழுது அதிலேயே விழுந்து உயிர் துறக்கின்றன.

வண்டு ரச புலனுக்கு அடிமை. தாமரை மலரில் அமர்ந்து தேனை ருசிக்கும் பொழுது தன்னை மறந்து கிடக்கிறது.

பிறகு சூரியன் அஸ்தமிக்கும் பொழுது சிக்கி இறந்து விடுகின்றது.

---

எறும்பு கந்த புலனுக்கு அடிமை. வாசனையுள்ள பொருட்களை தேடிச் செல்கின்றது. அப்பொருளிலேயே கிடந்து மடிகின்றது.

ஆறறிவு படைத்த ஜீவர்களுக்கு ஐம்புலன்களும் உள்ளன. ஆனால் பலர் ஒரு புலன் சம்பந்தப்பட்ட மட்டில் எஞ்சிய புலன்களைக் காட்டிலும் மிகவும் உணர்ச்சி வயப்படுவர்.

அவ்வுணர்ச்சி எப்புலனைச் சார்ந்ததோ அப்புலன் மற்றவற்றைக் காட்டிலும் அதிக வளர்ச்சி அடைந்திருக்கும்.

சக்தி அவ்வுணர்ச்சிகள் மூலமாக வெளிப்படும். அறிவு அதற்குத் தக்கபடி இயைந்து நிற்கும்.

புலனுணர்ச்சி சமமாக உள்ளவரே உலக நடையை நன்கு உணர்ந்தவர் ஆவர். மற்றையோர் ஒரு பகுதியையே சிறப்பாத் தெரிந்தவர் ஆவர்.

உலக நடையில் புலன்களை ஈடுபடுத்தி. உணர்ச்சியை வளர்த்து சக்தியை அதன் மூலம் விரயப்படுத்தி, நிலையில்லாத பொருட்களை ஆராய்வதைக் காட்டிலும், புலன்களின் தொடர்பு அற்று, உணர்வை ஒன்று கூட்டி. சக்தியை அதன் மூலம் செலுத்தி மெய்ப்பொருளின் தன்மையை அறிய அவாக் கொண்டனர் நம் பெரியோர்.

இதனையே சிவவாக்கியாரும் தமது பாடலில் தெளிவு படுத்துகின்றார்.

“பேசுவானும் ஈசனே பிரம்ஞானம் உம்முனே

ஆசையான ஐவரும் அலைந்தலைகைள் செய்கிறார்

ஆசையான ஐவரை அடக்கி ஓர்இடத்திலே

---

பேசிடா(து) இருப்பரேல் நா தம்வந்(து) ஒலிக்குமே." (சிவவாக்கியார்)

புலன்களை அடக்கி, சிந்தனைகளை ஒடுக்கி, பிரணவத்தில் ஊன்றி நிலைத்திருந்தால் சக்தியின் வேகத்தினால் உண்டாகும் தச நாதங்களையும உணராம்.

ஆனால் புலன்களை அடக்குவது தான் கடினம். அதற்கெனவே பெரியோர் கடுமையான விரதங்களை மேற்கொண்டனர்.

அந்தந்தப் பலனின் சம்பந்தப்பட்ட உணர்ச்சிகள் புலன்களைத் தூண்டிக் கொண்டே இருக்கும். அதனால் அமைதி இருப்பதில்லை.

அறிவு அறநெறியைத் தேடிச் செல்லும் பொழுது இவ்வுணர்ச்சிகள் அறிவையும் தம்வசம் இழுத்துச் செல்லும். இதனால் அவ்வுணச்சிக்குத் தக்க செயலில் உடல் ஈடுபடும்.

உடல் நிலையற்றது. அழிந்துபோகும் மாமிசம். உரோமம் தோல், நரம்பு, எலும்பு ஆகிய இவற்றினால் ஆக்கப்பட்ட புலால் நாற்றம் பொருந்திய குடிசை.

மிகவும் அருவருக்கத்தக்கது. இது பொய்யல்ல என்பதை அறிவு அறிந்திருந்த போதிலும் புலன்களின் உணச்சிகள் மிகுந்திருந்தால் அது தனித்து இயங்க முடிவதில்லை.

பாழான வழியில் செல்லுகிறது. துன்ப சாகரத்தில் அழுந்துகிறது. பிறவிப் பிணக்கு உட்படுகின்றது.

ஆகவே உணர்ச்சிகள் அனைத்தையும் பரநடையில் செலுத்தும் உபாயம் அறிய வேண்டும்.

படைகளை ஒன்று திரட்டினால் தான் மன்னவன் போர்க்களத்தில் வெற்றி காண முடியும்.

அது போல உணர்ச்சிகள் அனைத்தையும் ஒன்று திரட்டினால் பர நடையில் வெற்றிகாண முடியும்.

உணர்ச்சிகள் அனைத்தையும் ஒன்று திரட்டும் வரையிலும் மெய்ப்பொருளின் மீது மெய்மையான அன்பு உண்டாகாது.

ஓர் அறையில் திருடனும மற்றோர் அறையில் பொன்நாணயங்களும் நடுவில் ஒரு மெல்லிய திரையும் இருப்பின்அத்திருடனின் நிலை எவ்வாறு இருக்கும்?

அவன் நோக்கம் முழுவதும் அப்பொன்னைக் கவர்ந்து செல்வதிலேயே இருக்கும் அன்றோ?

நோக்கம் ஒரே பொருளின்மீது செல்லும் பொழுது உணர்ச்சிகளள அனைத்தும ஒன்றாகத் திரளும்.

திரையை நீக்கிப் பொன்னைப் பார்க்கும் பொழுது ஒருகணம் அவன் சூழ்நிலையை மறப்பது திண்ணம்.

நோக்கம் முழுவதும் ஒரு பொருளின் மீது ஊன்றிவிட்டமையால் அச்சமயம் எவரேனும் அங்கு வந்தாலும் அவன் அறியான்.

பர நடையில் செல்ல, நோக்கத்தை ஒரு பொருளின்மீது செலுத்த வேண்டும்.

அது பற்றற்ற பொருாக இருக்க வேண்டும். பற்றப்படும் பொருள் மலமற்றதாக இருப்பின் அதைப் பற்றும் ஜீவனின் நிலையும் தெளியும்.

பற்றப்படும் பொருள் மலமுள்ளதாக இருப்பின் ஜீவனும் வினைகளுக்கு உட்பட்டு இருக்கும்.

புலன்களின் இயக்கமே உடல் தொழிற்பட்டு வினை வசமாவதற்குக் காரணம்.

புலன்களின் இயக்கத்திற்கு அப்புலன்களின் சம்மந்தப்பட்ட உணர்ச்சிகளே காரணம்.

ஆகவே மலமுள்ள பொருள்களைப் பற்றுவதால் பற்றும் ஜீவனும் சுகப்படாது. பற்றப்படும் பொருளும் மேன்மை உறாது. இதைக் கருத்தில் கொண்டே

“பற்றுக பற்றற்றுன் பற்றினை அப்பற்றைப்

பற்றுக பற்று விடற்கு”

என்றார் வள்ளுவர். பற்றற்றவனாகிய இறைவனது பற்றினை மட்டும் பற்றிக் கொள்ள வேண்டும்.

உள்ள ஏனைய பற்றுகளை விட்டொழிப்பதற்கே அப்பற்றைப் பற்ற வேண்டும் என்பது இக் குறளின் விழுமிய கருத்து.

பற்றறற்ற பொருளின் மீது நோக்கத்தைச் செலுத்தும் போது உணர்ச்சிகள் புலன்களின் தொடர்பற்று அறிவோடு கூடி மனவெளியில் நிற்கின்றது.

பிறவி வாசனையின் காரணமாக இவை மீண்டும் புலன்களை நோக்கிச் செல்ல முயலும்.

அக்காலங்களில் தான் விழிப்புடன் இருக்க வேண்டும். தடை ஏற்படும் பொழுது தான் அவை பீரிட்டு எழும்.

சில சமயங்களில் தளர்ச்சியை உண்டு பண்ணும். சில சமயங்களில் வெறுப்புணர்ச்சியைய உண்டு பண்ணும்.

இவற்றிற்கு எல்லாம் தளர்ச்சியைடையலாகாது. கருமத்தில் கண்ணாக இருக்க வேண்டும்.

விடா முயற்சியோடு சாதனை செய்தவரின் உணர்ச்சிகள் ஒன்று திரண்டு உணர்வாகி மனவெளியில் ஊன்றி நிற்கும்ம்

உணர்ச்கிசள் ஒன்று திரண்டு உணர்வாகிய பின்னர் உலக நடையில் அவை இயங்குவதற்குக் காரணமாயிருந்த சக்தியும் மேல்நோக்கி வந்து அதனுடன் கலக்கிறது.

சக்தியோடு இணைந்த உணர்வு, குருவின் ஓர் சொல்லை மலையிலக்காகக் கொண்டு மனவெளியில் வேகமாகச் செல்கிறது.

இதுவே உண்மையான சமயப்பாதை ஆகும். இப்பாதையைத் தம்முள் அறிந்தவரே சமயத்தை அறிந்தவராவர்,

மற்றையோர் வாசா ஞானிகள் ஆவர். ஞான சாத்திரங்களை் கற்ற கல்வியும், பெரியோரிடத்துக் கேட்ட கேள்வியும் ஞானமும், இச்சமயப் பாதையை அறிவதற்கே பயன்படுத்தப்பட வேண்டும் இல்லாவிட்டால்

“கற்றதும் கேட்டதும தானே ஏதுக்காக

கட படமென்று உருட்டுவதற்கோ.” (தா.பா. )

-----------------------------------------------------------------------------------------------------------------

என்று தாயுமானவர் சொல்லியபடி வெறும் தர்க்கம் பேசி உழலும் நிலையகிவிடும்.

உணர்வு சக்தியுடன் கூடி மனவெளியில் செல்லுகையில் தக்க பருவகாலத்தில் குருமொழியானது ஒளியாகப் பிரகாசிக்கிறது.

உணர்வுக்கும் **அ**வ்வொளிக்கும் தாரணை உண்டாகிறது. திரியில் நெருப்பு வைத்தால் எரிந்து கொண்டே வந்து எலலாம் சூனியத்தில் கலந்துவிடும்.

அதுபோல் உணர்வுக்கும் ஒளிக்கும் தாரணை ஏற்படும்பொழுது உணர்வு அணுக்கள் தேய்த்துவர ஆரம்பிக்கும்.

ஒளியைப் பார்க்கும பொழுது தான் சூஷிம சரீரத்தின் தன்மை நமக்கு விளங்கும்.

உணர்வு அணுக்கள் தேயத் தேய உணர்கின்ற உணர்ச்சியும குறைந்துவரும். இந்நிலையை எய்தியவரே அன்பினை, பக்தியை அறிந்தவர் ஆவர்.

பிரம்மத்துக்கும் ஜீவனுக்கும் உள்ள சூஷ்ம சரடை அறிவதும் இந்த நிலையிலே ஆகும்.

"இடக்கை வலக்கை இரண்டையும் மாற்றித்
துதிக்கையால் உண்பார்க்குச் சொரவும் வெண்டா
உறக்கத்தை நீக்கி உணர வல்லார்கட்கு
இறக்கவும் வேண்டா இருக்கலும் ஆமே."

என்றனர் திருமூலர்.

இடக்கை வலக்கை என்பது ரேசக பூரகம் ஆகும். அதாவது உள் சுவாசம் வெளிச் சுவாசம் எனப்படுவது.

சக்தி கீழ் உள்ள வரையில் சுவாசம் வெளியே சென்று கொண்டிருக்கும். சுவாசம் எவ்வளவு வெளியே செல்லுகிறதோ சக்தி அவ்வளவு விரயமானதாகும்.

சக்தி அதிகமாக விரயமாக்கப்பட்ட நிலையிலே தான் மூப்பும் சாக்காடும் வருகின்றன.

இச்சக்தி விரயமாகாது இருக்க சுவாசம் நிற்க வேண்டும். சுவாசத்தை சிலர் பிராணன் என்று கூறுகின்றனர்.

சுவாசம் பிராணன் ஆகாது. சுவாசத்தை இயக்கும் மூலப்பொருளாகிய சக்தியே பிராணன் எனப்படும்.

உணர்வு மனவெளியில் குவியும் போது இப் பிராண சக்தி மேல் நோக்கி வந்து உணர்வுடன் கலக்கிறது.

சுவாசத்திற்குக் காரணமாயுள்ள பிராணன் மேல் வந்தபொழுது சுவாசம் நின்றுவிடுகிறது. கும்பக நிலை உண்டாகிறது.

ஒரு புத்தகத்தைகப் படிக்கும் பொழுது உணர்வு அத்தனையும் அதன்மீது செலுத்தி படிப்பபோமானால் சுவாசம் தானாக நின்று விடும்.

பிராணன் வீணே செல்வதற்குப் பதில் படிக்கின்ற பகுதிக்கும் உணர்விற்கும் இடையே தாரண உண்டு பண்ணும்.

அது போல் உணர்வு வெட்டவெளியில் நின்று ஒளியை நோக்கும பொழுது பிராணன் உணர்வு மூலமாக அவ்வுணர்வினுக்கும் ஒளிக்கும் தாரணை உண்டு பண்ணுகிறது.

இதுதான் சூஷ்மச் சரடாகும். இச் சூஷ்மச் சரடைக் கொண்டே சகாதேவன் கிருஷ்ண பரமாத்தமாவைக் கட்டி பாரதப்போருக்கு முடிவுகாண விழைந்ததை மகாபாரதம் நமக்கு உர்த்துகின்றது.

பாரதப்போர் என்பது மனப்போர். இதை ஒழிப்பதற்கு இறையருளை மனவெளயில் நிலையாக நிறுத்த வேண்டும்.

சூஷ்மச் சரடை அறிந்தவர்தான் இதனைச் செய்ய இயலும். சகாதேவன் இதனை அறிந்திருந்தமையால் மனப்போரை ஒழிக்க இறையருளை மனவெளியில் அச்சரடாக பிணைத்து விட்டான்.

சூஷ்மச் சரடால் ஒளியை மன வெளியில் நிறுத்திவிட்டால் ஒளியிலிருந்து உணர்வினுக்கு அமிர்தம் பெருகுகின்றது.

அமிர்தத்தில் திளைக்கும் உணர்வு உடல் நினைப்பொழிந்து எவ்வளவு காலமானாலும் தான் நின்ற நிலையிலேயே நிலையாக நின்றுவிடும்.

“தவள நிலவொழுகு அமிர்த தாரை உண்டு அழியாத தன்மையர்” என்று இந்நிலையில் உள்ள பெரியோரைக் குறித்தே சொல்லியுள்ளனர் தாயுமானர்.

இக்கருத்தினைக் கொண்டதே மேற்சொல்லிய சுவாசத்தைக் குறிக்கின்றது. துதிக்கையால் உண்பார்க்கு என்பது உணர்வினுக்கும்

ஒளிக்கும் இடையே இதனை நிறுத்தி ஒளியிலிருந்து வரும் அமுதினை உணர்வு உணர்ந்திருப்பது ஆகும்.

இவ்வாறு அமுதினைப் பருகுவோர்க்குச் சோர்வு கிடையாது. அவர்கள் எக்காலமும் அழியாதிருப்பர். அவர்களை சாக்காடும் நெருங்காது.

பிரம்மேந்திர் சரஸ்வதி என்ற யோகி ஒருவர் இருந்தார். அவர் ஒரு சமயம் ஓர் அறையை வாடகைக்கு அமர்த்திக் கொண்டு அதில் தங்கி குறிப்பிட்ட காலம் வரைக்கும் அதைத் திறக்கக் கூடாதென்று தன்னுடைய சீடனுக்குக் கட்டளை விடுத்து மேற்சொல்லிய யோக நித்திரையில் இருந்தார்.

மூன்று மாதங்கள் கடந்தன. யோகி வெளிவரவில்லை. மக்கள் அதைப்பற்றி பலவாறு பேச ஆரம்பித்தனர்.

மாவட்ட ஆட்சியருக்கு இந்த செய்தி எட்டியது. அவர் அந்த இடத்திற்கு வந்து, உடனே அறையைக் திறக்குமாறு உத்தவிட்டார்.

சீடன் குருவின் கட்டயைக் கூறித் திறக்க மறுக்கவே, கதவை உடைத்து யோகியின் உடலை வெளியே கொண்டு வருமாறு உத்தவிட்டார் கலெக்டர்.

அவ்விதமே செய்யப்பட்டது. யோகி கண் விழித்துப் பார்த்தார். கலெக்டர் தன் தவறை உணர்ந்தார். யோகியின் கால்களில் விழுந்து மன்னிப்பு பெற்று, அவ்விடத்தை விட்டு அகன்றார்.

மூன்று மாதங்கள் உணவும் இல்லாமல், அதனால் உடல் சோர்வும் இல்லாமல் எப்படி உயிர் வாழந்திருக்க முடியும்?

இதற்குத் தக்க விடை அளிக்கின்றது மேற்கூறிய திருமூலரின் பாடல். உறக்கத்தை நீக்கி உணர்வு மயமாய் நின்று துதிக்கையாகிய பிராணனால் அமிர்தத்தைப் பருகி இருக்க வேண்டும்.

அதனால் சோர்வு சிறிதும் இன்றி பர யாத்திரை செய்திருக்கிறார் யோகி. ஜனகர் சரித்திரத்திலும் இவ்வித சம்பவம் சொல்ப்பட்டிருக்கிறது.

உணர்வு ஒளியோடு தாரணையிலிருக்கும் சமயம் கண்களிலிருந்து நீர் அருவியென ஊற்றெடுத்துப் போகும்.

இதுவே அன்பின், பக்தியின் முதிர்ச்சியான நிலையையாகும். உணர்வு அணுக்கள் தேய்ந்து வரும்.

அச்சமயம எலும்புகள் நெக்குடைதல் போலவும், உரோமம் சிலிர்ப்பது போலவும், மனம் உருகுவது போலவும் காணப்படும்.

இதனைப் பட்டினத்தடிகள், "மண்ணுருகும் என்ற திருப்பாடலில் "எனது குருநாதன் உரைத்த ஒரு மொழியால், மணணுருகும். மரமுருகும். மாயையுருகும். மயக்கமும் உருகும். பெண்ணும் உருகும்.

ஆணும் உருகும். பேத அப்பேதப் பொருள்கள் எல்லாம் உருகும். சிவபெருமானும உருகுவர்.

அவரது இடப்பக்திலே பொருந்தியுள்ள் அன்னை பார்வதி தேவியும் உருகுவர். சர்ப்பத்தின் மீது சயனிக்கின்ற நாராயண மூர்த்தியும் உருகுவர்."

---

இவ்வாறு உணர்வு அணுக்கள் தேய்ந்து, தேய்ந்து இறுதியில் ஜீவ அணு உணர்தலுமற்று நின்று விடுகிறது.

“தேடுதலும் அற்ற இடம் நிலை என்ற மௌனியே என்று இந்நிலையைக் குறித்து தாயுமானவர் பிறிதொரிடத்தில் சொல்லி உள்ளனர்.

இந்நிலை அடையவே தாயுமானவர் பிரயத்தனப்படுகிறார். உணர்வை மனவெளியில் நிறுத்தி மெய்ப் பொருளைத் தேடிச் செல்லும்போது பிறவி வாசரனை காரணமாக உணர்வு புலன்கள் நோக்கிச் சென்று வழியை மறைக்கிறது.

இதனால் தாயுமானவர் மிகுந்த மனக்கிலேசமுற்றார். ஆனால் அவர் தளர்ச்சி அடையவில்லை.

மெய்ப பொருளைக்காண வேண்டும் என்ற அவாவும் அவருக்குக் குறையவில்லை.

சுத்த நிர்க்குணனாயும் அரண்ட ஜோதி வடிவினனாயும் உள்ள மெய்ப்பொருளை விளித்து “மனம் உருக, விழிநீர்கள் ஊற்றெடுக்க, அன்பினால் மூர்ச்சித்த நின் அடியார்களுக்கு பேரின்ப அமுதினை ஆனந்த மழையாகப் பொழிந்துள்ளீர்.

ஆனால் உள்ளன்பு இல்லாத என்னை யாருக்காக அடிமை கொண்டீர்? உமது திருவருளுக்கு இலக்காகமையினால் உலக நடையில் என் பற்றுச் செல்லும்?

மீண்டும் கர்ம வினைகளுக்கு உட்பட நேிடுமோ? துன்ப சாகரத்தில் விழுந்து பிறவிப் பிணிக்கு ஆளாக வேண்டி வருமோ?

வினைகள் வசம் அகப்பட்டு அறிவு தட்ழித்து செல்லுமோ? அவ்வாறு செல்லுமானால், ஐயனே! உலக நடையை ஒரு கனவிலும் நான் வேண்டேன்" என்று பாடுகிறார்.

தாயுமானவரின் அந்தப் பாடல் (பா.எ.81)

(சுகவாரி பா.5)

வெந்நீர் பொறாது என்உடல் காலில் முள் தைக்கவும்
வெடுக்கென் று அசைத்து எடுத்தால்
விழிஇமைத்து அங்ஙனே தண்ணருளை நாடுவேன்
வேறு ஒன்றை ஒருவர் கொல்லின்

அந்நேரம் ஐயோ என் முகம்வாடி நிற்பதுவும்
ஐயநின் அருள் அறியுமே
ஆனாலும் மெத்தப் பயந்தவன் யான்என்னை
ஆண்டநீ கைவிடாதே

இந்நேரம் என்று இலை உடல்சுமை, இது ஆகவும்
எடுத்தா ல் இறக்க என்றே
எங்கு எங்கும் ஒருதீர்வை ஆயம் உண்டு ஆயினும்
இறைஞ்சுசுகர் ஆதியான

தொல்நீர்மை யாளர்க்கு மானுடம் வகுத்தஅருள்
துணைஎன்று நம்புகின்றேன்
சுத்தநீர்க் குணமான பரதெய்வ மேபரம்
சோதியே சுகவாரியே.

தாயுமானவரின் அறிவுரைகளை பின்பற்றி. உலக நடையை விட்டுவிட்டு, பரநடையில் பயணிப்போமாக!